بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

கிலாஃபத்தும் முஜத்திதுவமும்

Jamaat Ul Sahih Al Islam, Tamilnadu.

நிச்சயமாக அல்லாஹ் இந்த உம்மத்தின் ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்திலும் முஜத்திதை (மார்க்க சீர்திருத்தவாதி) அனுப்புவான். (அபூ தாவூத், கிதாபுல் மலாஹிம், பாப் மா எஸ்குரு ஃபீ கரனில் மிஅ)

இந்த பிரசுரம் ஜூன் *10, 2011* அன்று அஹ்மதிய்யா ஜமாத்தின் தலைவர் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் கிலாஃபத்தும் முஜத்தித்துவமும் என்ற தலைப்பில் ஆற்றிய ஜும்மா பேருரையின் முக்கிய பகுதிக்கான பதிலாகும். இந்த குத்பாவில் இவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள், ஓர் சிறுவன் வக்ஃபே நவ் நிகழ்ச்சி ஒன்றில் "தற்போது முஜத்தித் வருவாரா?" என்று கேட்கிறார். அதற்கு "இத்தகைய கேள்விகள் எல்லாம் குழந்தைகள் தானாகவே கேட்பதில்லை, மாறாக அவர்களிடையே அமைதியின்மையை உருவாக்க நினைக்கும் அவர்களின் குடும்பத்தினர்கள் இத்தகைய விசயங்களை பற்றி விவாதிக்கும் போது, குழந்தைகள் மனதிலும் இத்தகைய கேள்வி எழுகின்றது, என்று குறிப்பிடுகிறார்கள்.

முஜத்திது பற்றிய இத்தகைய கேள்விகள் எப்படி குழந்தைகளிடையே அமைதியின்மையை உருவாக்கக்கூடும்? ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்திலும் முஜத்திது வருவார்கள் என்ற நபி(ஸல்) அவர்களின் முன்னறிவிப்பையும், மேலும் அதை உறுதிபடுத்திய மஸீஹ்(அலை) அவர்களின் கூற்றுக்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாத்தின் கலீஃபா ஏன் செயல்படுகிறார்? மேலும் இத்தகைய கேள்வி கேட்பவர்களை அவர் நயவஞ்சகர் என்றும் அழைக்கின்றார். மேலும் அவர், "இதே கேள்வி ஜமாத்தில் பல்வேறு காலங்களில் பலரால் கேட்கப்படுகின்றது. இத்தகைய கேள்வி ஜமாத்தின் நேர்மையான மற்றும் உறுதியான உறுப்பினர்கள் யாரும் கேட்பதில்லை. மாறாக குழப்பம் செய்ய எண்ணுபவர்களே இத்தகைய கேள்வியை முன் வைக்கின்றனர்." என்றும் கூறுகிறார்.

1400 வருடங்களுக்கு முன்பே எம்பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லா காலத்திலுள்ள முஸ்லிம்களுக்கும் வாக்குறுதி வழங்கி உள்ள போதிலும், இது போன்ற சர்ச்சைகள் எழும் காலங்களில் எல்லாம் அஹ்மதிய்யா ஜமாத்தின் கலிஃபா அவருடைய ஜமாத்தில் குழப்பம் ஏற்படுகின்றது என்று ஏன் கூற வேண்டும்? இது அவர்களின் உண்மையாளர்களின் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூல நரம்பை, நுபுவத் தொடுவதை உணர்த்த வில்லையா? மேலும் அவர் இவ்வாறு கூறுகின்றார், "அதாவது இந்த பிரச்சனை மூன்றாவது கலிஃபத்துல் மஸீஹ் காலத்திலிருந்தே பலரால் கேட்கப்பட்டு கொண்டிருந்தது." அப்படியானால் அப்போதிலிருந்தே இந்த அமைப்பில் பிரச்சனைகள் இருந்து வருகிறது

என்று சந்தேகம் கொள்வது இயல்புதானே? யாராவது முஜத்தித்களின் வருகையினை பற்றி கேட்டால் அவர்களின் வாய்கள் அடைக்கப்பட்டு, அவர்களின் மீது நயவஞ்சகர்கள் என்ற பலியை சுமத்துகின்றனர். இத்தகைய செயல்பாடுகள் ஜமாத்தின் சர்வாதிகார சிந்தனையும், சகிப்புத் தன்மை இல்லாததையும் உணர்த்தவில்லையா?

இன்னும் அவர் இவ்வாறு கூறுகின்றார். "இது என் மனதில் மீண்டும் மீண்டும் எழும் ஓர் விசயமாகும். இத்தகைய தேவையற்ற விசயங்கள் ஜமாத்தில் நிம்மதியின்மையை உருவாக்குகின்றது." அஹ்மதிகளை பொறுத்தமட்டில் முஜத்தித்களின் வருகையை பற்றிய கேள்வி ஹஸ்ரத் அஹமத்(அலை) அவர்களின் கூற்றிலிருந்தே எழுகின்றது, இருந்தபோதிலும் ஏன் அஹ்மதிய்யா கலிஃபாவின் கவனத்திற்கு இந்த அறிக்கைகளை எடுத்து செல்லும் போது அன்னார் அவரின் கோபத்தை வெளிப்படுத்துகின்றார். மேலும் அவர் தனது உரைகளில் நடுநிலையை இழந்தது மட்டுமன்றி, பல பிரச்சனைகளில் முரண்பாடான கருத்துக்களையே முன்வைப்பவராகவே உள்ளார்.

ஓரிடத்தில் அவர் இவ்வாறு அறிவிக்கின்றார். "ஹஸ்ரத் முகம்மது (ஸல்) அவர்கள் கூறிய ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் தோன்றுவார் என்பதில் எவ்வித ஐய்யமும் இல்லை" மேலும் மற்றொரு இடத்தில் "ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள்தான் இறுதி 1000 ஆண்டிற்கான முஜத்தித் என்றும், மேலும் நூறாண்டிற்கு பிறகு புதிய முஜத்தித்களின் தேவை இருக்காது" என்றும் கூறுகிறார்..

ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்களின் வருகையை பற்றி கூறிய இவர், பின்பு அதனை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டார். நபி (ஸல்) அவர்களும், அஹ்மத் (அலை) அவர்களும் நூற்றாண்டை பற்றி கூறி இருந்த நிலையில், தற்போதைய கலிஃபாவோ அதனை ஆயிரம் ஆண்டுகள் என்று அதிகரிக்க முயல்கின்றார். அஹ்மதிய்யா ஜமாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிஸ்ரா குலாம் அஹ்மத் அவர்கள் மிக தெளிவாக அறிவித்து உள்ளார்கள். அதாவது "நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன். ஆனால் நான் தான் முதல் மற்றும் இறுதியான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று கூற மாட்டேன்.

என்னை பொறுத்தமட்டில் என்னுடைய காலத்திற்கு பிறகு 10,000 மஸீஹ் வரலாம். இக்காலத்திற்கான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நான் ஒருவனே ஆவேன் (இஸாலே அவ்ஹாம் பக்கம் 197)

ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறைபணியாளர்கள் சீர்திருத்தவாதியாக வரும் போதெல்லாம், அவரை நிராகரிக்கும் மக்கள் கடுமையாக எதிர்த்தனர். மேலும் அவர்களிடம் இருக்கும் தவறான பழக்க வழக்கங்களை சரி செய்வதையும் கடுமையாக வெறுத்தனர். (லக்சர் சியால்கோட் பக்கம் 2

என்னுடைய காலத்திற்கு பின் இக்காலத்திற்கு ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் என்ற இந்த சொற்றொடர்கள் எல்லாம் ஆயிரம் ஆண்டுகளை குறிக்கின்றதா என்ன? அல்லாஹ்வின் தூதரின் வருகையை அஹ்மதிய்யா கலிஃபா தடுக்க நினைப்பது, அவருடைய மற்றொரு கூற்றினால் நிரூபணம் ஆகின்றது, அது என்னவென்றால், ஒன்றை நினைவில் கொள்ளுங்கள் ஒவ்வொரு கலிஃபாவும் முஜத்தித்தான், அவர்கள் தங்களை முஜத்தித் என்று வாதித்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி. ஏனெனில் அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வேலையை செய்கின்றார்".

சில சமயங்களில் அஹ்மதிய்யா கலிஃபாவை தேர்வு செய்வது என்பது முந்தைய கலிஃபாவின் மரணத்தை சார்ந்த பதவியாகும், மறுபுறம் பார்த்தால் முஜத்தித்தின் வருகை என்பது காலம் அல்லது நூற்றாண்டோடு தொடர்புடையது. இவை இரண்டும் எவ்வாறு இணக்கமானதாக இருக்க முடியும். மேலும் மிர்ஸா குடும்பத்திலிருந்து வந்த கலிஃபாக்கள் தற்போது உள்ளவர் உட்பட அனைவரும் முஜத்தித் என்றால் ஓர் நூற்றாண்டு நிறைவு பெற்ற அஹ்மதிய்யா ஜமாத்திற்கு ஒரே நூற்றாண்டில் ஐந்து முஜத்தித்களா? பின் ஏன் அதனை அவர்கள் இன்றளவில் ரகசியமாக வைத்திருக்க வேண்டும்?

மிர்ஸா மஸ்ரூர் அவர்கள் "ஒவ்வொரு கலிஃபாவும் அவரின் காலத்தில் முஜத்தித் தான்" என்று கூறுகிறார். அவரே ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்தில் இறைவன் அக்கால கலிஃபாவிற்கு முஜத்தித் என்ற அந்தஸ்தை தருவான். மேலும் அவனே அன்னாரை அறிவிக்கவும் செய்வான் என்றும் கூறுகிறார்.

ஆனால் அவரோ தற்போது "ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்திலும் முஜத்தித் தோன்றுவார்" என்று கூறுகின்றார். இருந்த போதிலும், அன்னாரின் உண்மையாளர்களின் சபை முதலில் கலிஃபாவை தேர்ந்தெடுப்பார்கள், பின்பு இறைவன் வேறு வழியின்றி மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலிஃபாவை முஜத்தித் என்று அறிவிக்குமாறு கூறுவானா என்ன? காலத்தின் அடிப்படையில் அன்னார் தகுதி பெற்றவர் என்றால் அன்னார் ஏன் தன்னை முஜத்தித் என்று பிரகடனப்படுத்தவில்லை? மேலும் அவர் "முஜத்தித்தாக ஆவதினால் கிலாஃபத்தின் நிலையை மாற்ற போவதில்லை. மேலும் முஜத்தித்தின் அந்தஸ்தை விட கிலாஃபத்தின் அந்தஸ்தே முதன்மையானதாக உள்ளது" என்று கூறுகின்றார்.

ஹஸ்ரத் அஹ்மத்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள், ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு முஜத்தித் மார்க்கத்தைப் புதுபிக்க வருவார். ஆனால் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் என்ன கூறுகிறார் என்றால் சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலிஃபா தான் இறைவன் தேர்ந்தெடுக்கப்பட்ட முஜத்தித்தை விட முதன்மையானவர் என்றும் ஒவ்வொரு அஹ்மதிய்யா கலிபாவும் ஓர் முஜத்தித் என்றும் கூறுகின்றார். பின்பு அதனை தெளிவுபடுத்துவதற்காக, ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் இறைவன் நாடினால் என்றும் கூறுகின்றார். இதனை சுருக்கமாக கூறுவதென்றால், முஜத்தித்தின் ஆன்மீக அலுவலகமானது அஹ்மதிய்யா கலிபாஃக்களுக்கு பிரத்தியேகமாக முன்பதிவு செய்யப்பட்டு விட்டது. மேலும் அந்த வட்டத்திற்கு அப்பார்பட்ட எவரும் (அஹ்மதிகள் உட்பட) வருங்காலத்தில் முஜத்தித்தாக முடியாது. அஹ்மதிகள் முஜத்தித்தின் வருகையை எதிர்க்கும் வண்ணம் பொதுவாக இரண்டு வாதங்களை முன் வைக்கின்றனர். அவை கிலஃபத் நுபுவத்தின் விதிமுறையில் அமைந்துள்ளது. மேலும் கையில் தண்ணீர் இருக்கும் வேலையில் "தயமம்" செய்வதின் தேவை என்ன? ஆனால் பின் அந்த தண்ணீரானது அழுக்குற்று அசுத்தமாக இருப்பின் அது பயன்படுத்த கூடியதாக இருக்குமா? மிர்ஸா மஸ்ரூர் அவர்கள் நுபுவத்தின் உரிமையை பெற்றுள்ளாரா? ஆன்மீக வெளிப்பாட்டை பெற கூடியவராக இருக்கின்றாரா? இவை எதுவும் இல்லையெனில், அந்த தண்ணீரானது புனிதமானதா அல்லது புனிதமற்றதா? உண்மை என்னவெனில் ஆன்மீக உண்மை என்ற நீரோடை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஜத்தித்தின் வழியாகவே பாய்கின்றது. ஆனால் மனித சபையில் தேர்ந்தெடுக்கப்படும் ----

கலிஃபாக்களின் வரலாறானது நிழல்கள் நிறைந்த புதிராக காணப்படுகின்றது. கீழ்காணும் சம்பவங்கள் ஆன்மீக நிச்சயமற்ற தன்மைகளின் மீது முத்திரை பதியப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் உஸ்மான்(ரலி) அவர்கள் தனது தாடியால் பிடிபட்டார். ஹஸ்ரத் அலி(ரலி) அவர்கள் கையில் பையத் செய்யாத முஆவிஆ என்ற ஒருவர் கலிஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி(ரலி) அவர்கள் மீது போர் தொடுத்தார்கள். அதே போல் அஹ்மதிய்யா ஜமாத்தின் நான்காவது கலிபாவை தேர்ந்தெடுக்கும் போது மிர்ஸா குடும்பத்தை சார்ந்த ஒருவர் தேர்தல் அறையை விட்டு வெளியேறினார். மேலும் அவரை பின்பற்றுபவர்கள் அனைவரும் சேர்ந்து " Green Ahamadiya" என்ற அமைப்பை உருவாக்கினர். இவை அனைத்தும் மனித சபையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலிஃபாக்களின் இருண்ட அத்தியாயங்களாகும். மறுபுறம் முஜத்திதின் வரலாறோ முழுக்க முழுக்க பரிசுத்த ஆன்மாவினால் வடிவமைக்கப்பட்டது. சத்தியதூதன் என்ற நூலின் தொகுப்பாளர் A. M. முகம்மது சலீம் சாகிப் அவர்கள்

"எப்போது கிலாஃபத் ஓர் பொருளாக மாறிவிடுமோ அப்போது முஜத்தித்தின் மூலம் இஸ்லாத்தில் விரைந்து இணைவார்கள்" (சத்திய தூதன், டிசம்பர் 2008, பக்கம் 32) என்று கூறியதில் வியப்படைய வேண்டியதில்லை. இவர் வரலாற்றின் அடிப்படையை கொண்டு கிலாஃபத்தின் வீழ்ச்சியையும் நுபுவத்தின் வெற்றியையும் ஆய்வு செய்தவர்.

"நம்பிக்கை மற்றும் நற்செயல்களே ஓர் நல்ல கிலாஃபத் அமைப்பின் அடிப்படை, அந்த அடிப்படை எப்போது உடைந்து விடுமோ அப்போது கிலாஃபத் என்பது வெறும் அதிகாரத்தை கொண்டு ஆட்சி செய்யும் ஓர் அமைப்பாக அல்லது வெறும் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகமாக மாறிவிடும்" (சத்திய தூதன், டிசம்பர் 2008, பக்கம் 31)

சத்தியத்திற்கான தேடல் உள்ளவர்கள் உண்மையை அறிய முற்ப்படும் போது அதாவது "முஜத்தித் வருவாரா?" என்று கேள்வி எழுப்பும்போது அப்படிப்பட்டவர்களை எல்லாம் நேர்மையற்றவர்கள், நயவஞ்சகர்கள், குழப்பவாதிகள் என பல பெயர்களை சூட்டிவிடுகின்றனர்.

ஜமாத்தின் தலைமைத்துவத்தை முடக்கக் கூடிய இத்தகைய கவலைகளுக்கு பின்னால் இருக்கும் மனநிலை தான் என்ன? அஹ்மதிய்யா கிலாபத்தின் அதிகாரம் ஓர் தனி நபரை மையமாக வைத்துவிட்டது. அந்த தனிநபரின் உத்தரவுகள் அச்சுறுத்தலாக உள்ளது, மேலும் கலிஃபா என்பவர், இறை உதவிகளையும் ஆன்மீக வெளிப்பாடுகளையும் பெறுகின்றாரா? என்பதை சிறிதும் பொருட்படுத்தாமல், அவரை பின்பற்றும் நம்பிக்கையாளர்களை ஷிர்க் என்னும் நிழலின் கீழ் நிரந்தரமாக கொண்டு வரும் நோக்குடன், அவரை இறைவனால் நியமிக்கப்பட்ட கலிஃபா என்று நம்ப வைக்கின்றனர்.

ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களின் நிழலை பற்றி, கூறுகிறார்கள் சுருக்கமாக கூறுவதென்றால் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் "காத்த முல் குலபா" அதாவது கடந்த 1000 ஆண்டின் முஜத்தித்தின் முடிவிற்கு பிறகு முஜத்தியத் அன்னாரின் நிழலில் இருந்தே தென்படும். மேலும் கிலாஃபத் என்னும் அமைப்பு அன்னாரின் உண்மையான பிரதி பிம்பமாகவே இருக்கும்" என்று கூறுகிறார்.

அஹ்மதிய்யா கிலாஃபத்துதான் ஹஸ்ரத் அஹ்மத்(அலை) அவர்களின் உண்மையான பிரதி பிம்பம் என்று கலீஃபா கூறுகிறார். ஆனால் இறைவனின் இரண்டாம் ஆன்மீக வெளிப்பாடு என்று வலியுறுத்த அஹ்மதிய்யா கிலாஃபத் அமைப்பிடம் என்ன ஆதாரங்கள் உள்ளது?

இந்த கிலாஃபத் அமைப்பின் கீழ் இருக்கும் ஊழியர்களுக்கு மக்களை அஹ்மதிய்யத்திற்கு மாற்ற வேண்டியே இலக்குகள் வழங்கப்படுகின்றது. தனியுரிமை, நேர்மை, மற்றும் நியாயத்தன்மை ஆகியவற்றை அவமதிக்கும் விதமாக அதன் தலைவர் (கலிஃபா) எதை கேட்க விரும்புகின்றாரோ, அதையே அதன் அலுவலர்களும் கூற ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் உலகளாவிய பைஅத்களை குறைந்த அளவு உண்மை மற்றும் விவேகம் கொண்டே அவ்வமைப்பின் தலைவரால் முத்திரையிடப்படுகிறது. மேலும் கலிஃபாக்கள் ஒரு பெரிய பாதுகாப்பு படையோடும், அதிகாரிகள் குழுக்களோடும் உலகம் முழுவதும் உலா வருகின்றனர். ஆனால் இவர்களின் ஆடம்பரம் சாமானிய அஹ்மதிகளிடமிருந்து பறிக்கப்பட்டது என்பதில் துளியும் கவலை அடைவதில்லை. ஆனால் யாராவது முஜத்தியத்தைப் பற்றி கேட்டால் அன்னார் அவரின் ஜூம்ஆ உரைகளின் மூலம் மிரட்டல் விடுத்து -----

அச்சுறுத்தப் படுகின்றனர். எனவே நீங்கள் "கலிஃபா" என்றும் "நிஸாமே ஜமாத்" என்றும் அழைக்கப்படும் இத்தகைய தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் எவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிழலாக இருப்பார்கள்?

உண்மையின் பிரதிபலிப்பும் / சூரிய கிரகணமும்

ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்கள் 14 ஆம் நூற்றாண்டின் முஜத்தித்தாக மட்டும் இருக்கவில்லை. அவர் இமாம் மஹ்தியாகவும் மஸீஹ் ஆகவும் மேலும் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலிஃபாவாகவும் இருந்தார். அன்னார் கூறிய முன்னறிவிப்பு மற்றும் இறைபனிக்கு சான்றாக சூரியன் மற்றும் சந்திர கிரகணம் ரமலான் மாதத்தில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்கள் அறிவித்ததை போலவே மொரீசியஸை சேர்ந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மத் சாகிப் அவர்கள் இந்த நூற்றாண்டின் முஜத்தித் என்று அறிவிக்கின்றார். பின்னர் அவர், இந்த 15 ஆம் நூற்றாண்டின் முஜத்தித் மட்டும் இல்லை என்றும் அவர் முஹையுதீன், கலிஃபத்துல்லாஹ், அல் மஸிஹே மவூத் மற்றும் அமீருல் முஹ்மினீன் என்றும் அறிவிக்கின்றார்கள்.

அன்னார் தனது மார்ச் 25, 2011 அன்று ஆற்றிய ஜும்மா உறையில், சத்தியத்தை தேடுபவர்களுக்கு ஓர் அசாதாரண உண்மையின் மூலம் இந்த உலகின் கவனத்தை ஈர்த்தார். அதாவது நவம்பர் 2003-ல் உண்மையில் சூரிய மற்றும் சந்திர கிரகணம் ஏற்பட்டது . மேலும் இது ஹஸ்ரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்களின் அறிவிப்பிற்கு சான்றாக இருந்தது. அதே உரையில் அவர் நிலவு இரண்டாக பிளந்தது என்றும் அந்த நிகழ்வு இதே காலத்தில் மீண்டும் நிகழப்போவதாக அறிவித்தார். அதாவது புனித நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நடந்த ஓர் நிகழ்வு என்னுடைய காலத்திலும் நிகழும், இந்த இறை அடையாளத்தின் மூலம் என்னுடைய நண்பர்களுக்கும், எதிரிகளுக்கும் நான் இறைவனால் இந்த காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இறை தூதன் என்பதற்கு சான்றாக இருக்கும். மேலும் அதுவே திருக்குரானின் 62வது அத்தியாயத்தில் முன்னறிவித்துள்ள நபி (ஸல்) அவர்களின் இரண்டாவது வருகையாகும். இந்த முன்னறிவிப்பு (நிலவின் பிளவு) பௌதிகமாகவும், ஆன்மீகமாகவும், மேலும் நேரடியாகவும் உருவகமாகவும் இருக்கும்.

அஹ்மதிய்யா கலிஃபா இதை போன்று அதாவது முனீர் அஹ்மத் (அலை)

அவர்கள் அறிவித்ததை போன்று ஏதேனும் அறிவிப்பு செய்துள்ளாரா? மேலும் மொரீசியஸில் நடக்கும் இந்த அற்புத நிகழ்வுகளுக்கும் கலிபாஃவுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா?

"பிரதிபலிப்பு" "பிரதிபிம்பம்" என்ற அந்த முன்னறிவிப்பு யாரிடம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது? கிலாஃபத்துடனா, கலிஃபாவிடமா "பிரதிபலிப்பாக இருப்பவர்களுக்கு அடையாளங்கள் உள்ளன". (திருகுர்ஆன்)

டாக்டர் தாஹிர் எடப்பகத்

செயலாளர் : **ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்**

கேரளா **(Reg.No 693/2010)**

மொழிபெயர்ப்பு : **கா. ஷாநவாஸ்**
ஷா. முகமது ரஃபி

பதிப்பித்தல் : **சிராஜுதீன் சாஹிப் (அமீர்)**
ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்
தமிழ்நாடு

”உங்களுக்கு முன்னிருந்தோரை கலீஃபாவாக ஆக்கியது போல், உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிபவர்களை பூமிக்கு கலீஃபாவாக்கி வைப்பதாகவும், அவர்களுக்கென அவன் பொருந்தியுள்ள மார்க்கத்தில் அவர்களை உறுதிப் படுத்துவதாகவும், அவர்களின் அச்சத்திற்குப் பின்னர் அமைதியானதாய் மாற்றுவதாகவும் அல்லாஹ் வாக்களித்துள்ளான். அவர்கள் எனக்கு எதையும் இணை வைக்காமல், என்னையே வணங்குவார்கள். இதன் பின்னர் மாறு செய்வோரே பாவிகள்.

(அல் குர்ஆன்24:55)